சுபமங்கள ஸ்தோத்ர சீரிஸ் : 8

ராகு பகவான்

(ஆராதனை முறை, அஷ்டோத்தர சத நாம அர்ச்சனை, கவசம், மந்திரம், காயத்ரி, புராண வரலாறுகள் அடங்கியது)



நான்காம் பதிப்பு 1995 விலை : ரூ. 6-00

KADALANGUDI PUBLICATIONS

கடலங்குடி பப்ளிகேஷன்ஸ்
38, நடேச அய்யர் தெரு,
தி. நகர் (பஸ் ஸ்டாண்ட் அருகில்)
சென்னை - 600 017, (INDIA).

ஓர் அரிய வாய்ப்பு

ஜோதிடம் தபாலில் கற்கலாம்

தமிழ் / ENGLISH

தம்முடைய நாற்பத்தெட்டு ஆண்டுகளுக்கும் மேலான ஜோதிட அனுபவமும் பரம்பரைக் கல்லஞானமும் பலருக்கும் பயன்படும் முறையில் தபால் மூலம் ஜோதிடம் கற்பிக்க டாக்டர் கே. என். சரஸ்வதி அவர்கள் ஓர் எளிய முறையை உருவாக்கி இருக்கிறார். இம்முறையில் ஜோதிடம் பயில 4 மாதங்கள் பிடிக்கும். ஒரே முறையாக எல்லா பாடங்களும் ரெஜிஸ்டர் தபால் மூலம் அனுப்பப்படும். பாடங்களுடன் வினாத்தாள்களும் சேர்த்து அனுப்பப்படும்.

4 மாத முடிவில் 'கடலங்குடி ஜோதிட ஆராய்ச்சி மையம்' என்ற அமைப்பின் சார்பில் அருமையான Diploma வழங்கப்படும். மாணவர்களுக்கு மட்டும் எங்களுடைய புத்தகங்கள் சலுகை விலையில் தரப்படும்.

அட்மிஷன் பாரத்துக்கும், கட்டணம், பாடத்திட்டம் முதலான எல்லா விவரங்கள் அடங்கிய Prospectus-க்கும் ரூ. 12.00 M. O. செய்யவும். English கோர்ஸுக்கான Prospectus வேண்டுவோர் ரூ. 15-00 M O. செய்யவும்.

வெளி நாட்டோர் கட்டணம் முதலான எல்லா விவரங்களுக்கும் £ 1 British Postal Order அனுப்புக.

Prospectus-இன் விலையோ கல்வியின் கட்டணமோ முன்னறிவிப்பின்றி மாற்றப்படலாம். எனவே அவ்வப்போது நிலையைக் கேட்டறிந்து M.O /B.P.O. செய்க.

பின்குறிப்பு: : டாக்டர் **K. N. S**-ன் ஜாதக பலன்களுக்கும் தொடர்பு கொள்க.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :

Kadalangudi Astrological Research Centre
38, Natesa Iyer Street
Madras - 600 017
INDIA

உ

ஸ்ரீ ராமஜெயம்



ராகு பகவான்

இந்திய முறையிலும், மேற்கத்திய முறையிலும் முக்கியமானக் கிரகங்கள் சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், குரு, சனி, சுக்கிரன் என்ற ஏழுதான். நவக்கிரகங்கள் என்ற எண்ணிக்கையில் ராகுவும் கேதுவும் இடம் பெறுகின்றன. மேற்கத்தியமுறையில் ராகுவை 'நார்த் நோட்' என்றும் கேதுவை 'ஸௌத் நோட்' என்றும் கூறுவர், (Nodes).

''ராகுவும் கேதுவும் கிரகங்கள்தாம். சஞ்சரிக்கும் ராசிகளுக்கேற்ப அவை பலன் கொடுக்கின்றன'' என்று சோதிட நூல்கள் கூறுகின்றன. ராகுவையும் கேதுவையும் சாயாக் கிரகங்கள் (நிழல் கிரகங்கள்) என்று கூறுவார்கள். அதாவது வலுவான மற்றக்கிரகத்தைச் சார்ந்து பலன் அளிக்கும் கிரகங்கள் என்று பொருள்.

ஒருவரின் ஜாதகத்தில் சனி அமைந்திருக்கும் ராசியைப் பொருத்து ராகு பகவான் பலன் அளிப்பார் என்பார்கள். சனியும் சுக்கிரனும் ராகுவுக்கு நட்புக் கிரகங்கள். ராகுவுக்கும் கேதுவுக்கும் உச்ச நீச வீடுகளைப் பற்றிக் கூடச் சில நூல்கள் கூறுகின்றன. சனியின் ஆட்சி வீடான மகரத்தை ராகுவின் ஆட்சி வீடாகக் கொள்வார்கள். விருஷபத்தில் உச்சன் என்றும் விருச்சிகத்தில் நீசன் என்றும் சில நூல்கள் கூறியிருக்கின்றன. ஆட்சி வீடே ராகுவுக்குக் கிடையாது என்றும் சொல்கிறார்கள். சனியின் பலத்தைப் பொறுத்தே ராகுவின் பலன்களைக் காணவேண்டும் என்பதே பொது விதி.

ஃ ஃ ஃ

சூரிய, சந்திரக் கிரகணங்கள் ஏற்படுவதற்கு ராகு காரணம் என்று புராணக்கதை இருக்கிறது. இந்தக் கதை ராகு கேது ஆகிய இரண்டு கிரகங்களுக்குமே பொதுவானது.

விப்ரசித்தி என்ற அசுர மன்னன் இருந்தான். அவனுடைய மனைவியின் பெயர் சிம்ஹிகை. இந்தத் தம்பதிக்குப் பிறந்தவன் ராகு.

அமுதம் பெறுவதற்காகத் தேவர்களும் அசுரர்களும் பாற்கடலைக் கடைந்தார்கள். மகாலட்சுமி, சந்திரன் இருவரும் பாற்கடலிலிருந்து அப்போது தோன்றினார்கள். பிறகு ஆலகால விஷமும் வந்தது. அந்த நஞ்சின் வெப்பத்

தைத் தாங்க முடியாமல் அசுரர்கள் துடித்தார்கள். பரம சிவன் அந்த நஞ்சை விழுங்கி நீலகண்டன் ஆனான். கடைசியில் அமுதம் வந்தது.

தேவர்களும் அசுரர்களும் அந்த அமுதத்தைப் பெற தங்களுக்குள் சண்டையிட்டுக் கொண்டார்கள். தங்கள் பலத்தினால் அசுரர்கள் அமுதம் முழுவதையும் தாங்களே எடுத்துக் கொண்டு விடுவார்கள் போன்ற நிலை உருவாகிறது. அதைக் கண்ட தேவர்கள் மகாவிஷ்ணுவிடம்முறையிட்டார்கள். அசுரர்களின் பேராசையை உணர்ந்து தேவர்களுக்கு உதவ முனைந்தார் ஸ்ரீ நாராயணன். பலம் பொருந்திய அசுரர்களை மயக்கித் தம் எண்ணத்தை சாதித்துக் கொள்ள மகாவிஷ்ணு, மோகினியின் அவதாரம் எடுத்தார். அழகான பெண்ணாக உருக்கொண்டு பாற்கடலின் பக்கம் வந்தார்.

அமுதத்துக்காக சண்டையிட்டுக் கொண்டிருந்த அசுரர்கள், மோகினியின் அழகில் சொக்கி, மோகினியைப் பின் தொடர்ந்தார்கள்.

மோகினியின் அவதாரம் எடுத்த மகாவிஷ்ணு, எல்லோருக்கும் தாமே அமுதத்தைப் பங்கிட்டுக் கொடுப்பதாகக் கூறவே அசுரர்கள் அதற்கு ஒப்புக் கொண்டார்கள். தேவர்களையும் அசுரர்களையும் தனித்தனியாக உட்காரச் சொன்னார். முதலில் தேவர்களுக்கு அமுதத்தைப் பங்கிட்டுக் கொடுக்க முனைந்தார். மோகினியின் அழகில் மயங்கிய அசுரர்கள் வாயைப் பிளந்து கொண்டு உட்கார்ந்திருந்தார்கள்.

விப்ரசித்தி என்ற அசுரனின் மகனான ராகுவுக்கு இந்த யுக்தி தெரிந்து விட்டது போலும். தான் தேவர்களைப் போல் மாறுவேடம் அணிந்து கொண்டு சூரியனுக்கும் சந்திரனுக்கும் மத்தியில் போய் உட்கார்ந்தான். வரிசையாக அமுதத்தை வழங்கி வந்த மோகினி ராகுவுக்கும் அமுதத்தை வழங்கி விட்டாள். தேவர் உருவில் இருந்த ராகுவும் அமுதத்தை உண்ணத் தொடங்கிவிட்டான். ஆனால் சூரிய

யனும் சந்திரனும் ராகுவின் சொரூபத்தை உணர்ந்து கொண்டு; மகாவிஷ்ணுவிடம் சூசகமாகத் தெரிவித்து விட்டார்கள்.

உண்மையை உணர்ந்த மோகினி உருக்கொண்ட மகா விஷ்ணு, தம் கையிலிருந்த அமுதத்தை வழங்கிய சட்டுவத்தால் அடித்தார். தம் சக்கரத்தை ராகுவின் தலையை நோக்கி வீசினார். தலை துண்டிக்கப்பட்டு ராகு வீழ்ந்தான்: ஆனால் அமுதம் உண்டிருந்ததால் அவன் இறக்கவில்லை.

தலையுடன் இரண்டு கைகளும் சேர்ந்து விழுந்தன. மற்றைய பகுதி தனியே வேறு இடத்தில் போய்விழுந்தது. தலையும் கைகளும் சேர்ந்த பகுதி பர்ப்பரா தேசத்தில் போய் விழுந்தது. அந்தச் சமயத்தில் பைடீனஸன் என்பவன் தன் மனைவியுடன் அங்கே போய்க் கொண்டிருந்தான். அவர்கள் ராகுவாகிய அசுரனைத் தம் அரண்மனைக்கு எடுத்துச் சென்று அன்பாக வளர்த்து வந்தனர்.

சூரியனும் சந்திரனும் தன்னைக் காண்பித்துக் கொடுத்ததால் அவர்கள் மேல் அவனுக்குக் கோபம். அதனால் தான் அவர்களைப் பிடிக்கத் (பீடிக்கத்) தொடங்கினான். ‘கிரகணம்’ ஏற்படுவதற்கு இதுதான் காரணம்.

திருமால் தன்னை அடித்தாலும், அவரால் அமுதம் கிடைத்தமையால், திருமாலை நோக்கித் தவம் புரிந்தான் ராகு. இயல்பான தலையுடன் பாம்பின் உடல் அவனுக்கு இணைந்தது. திருமாலை நோக்கித் தவம் செய்தமையால் அவருடைய அருளினால் கிரகப் பதவியை அடைந்தான். ராகு அப்பிரதட்சணமாக மேருமலையைச்சுற்றிவருகிறான்.

ஃ ஃ ஃ

ராகுவுக்கு நான்கு கரங்கள். வரதம், கடகம், கேடகம், சூலம் என்ற நான்கையும் தாங்கும் கரங்கள். சிங்காசனத்தில் வீற்றிருப்பவன். வலக்கையில் புத்தகமும் கம்பளியும் ஏந்தி, இடக்கையில் ஒன்றுமில்லாமலும் உள்ள இரு கரத்தான் என்றும் எட்டுக் குதிரைகள் பூட்டிய வெள்ளி ரதத்

தில் ஏறி வருவானென்றும் விஷ்ணு தர்மோத்தரம் என்ற நூல் கூறுகிறது.

'கயானச் சித்ர' என்று தொடங்கும் மந்திரம் ராகுவை வழிபடுவதற்கு ஏற்ற மந்திரம். இந்த மந்திரத்தின் ரிஷி வாமதேவர்; சந்தஸ் காயத்திரி. முறத்தைப் போன்ற ஆசனத்தில் வீற்றிருப்பவன் என்றும் நிருருதி திசைக்கு உரியவன் என்றும் சில நூல்களில் காண்கின்றன. கரிய முடியையும் கரிய திருமேனியையும் உடையவன். பைடீனஸ கோத்திரத்தைச், சேர்ந்தவன், சூரிய மண்டலத்தில் சூரியனுக்குத் தென்மேற்கில் ஆவாகனம் செய்து பூஜிப்பது வழக்கம். ராகுவின் அதிதேவதை துர்க்கை; பிரத்யதி தேவதை ஸர்ப்ப ராஜா; அமுதகடிகன் என்ற பிள்ளை உண்டு.

நீண்ட திருமேனியை உடையவன். தாமத குணம் பெற்றவன்: கோமேதகம் இவனுக்கு உகந்தமணி, மந்தாரை மலரும் அருகம் புல்லும் இவனை வழிபட ஏற்றவை; சித்ர நந்தனன், ருத்ரப்பிரியன், காலரூபன், மகாபலன், மகோதரன், அர்த்த காமன், ஸதாக்ரோதீ, ரௌத்ரன், தானவமந்திரி என்று பல பெயர்களை உடையவன். ஒருவர் ஜாதகத்தில் ஆறாமிடத்தில் ராகு இருந்தால் அதிகக் கடன் தொல்லை இருக்காது என்று கூறுவார்கள்.

சங்கீத மும்மூர்த்திகளில் ஒருவராகிய முத்துசுவாமிதீட்சிதர் இயற்றிய நவக்கிரக கீர்த்தனைகளில் ராகுவைப்பற்றியும் பாடியிருக்கிறார். அசுரனாக இருந்து தேவனாக மாறிய உடலை உடையவன். நோயைப் போக்குபவன்; பாம்பு முதலிய விஷஜந்துக்களால் உண்டாக்கும் பயத்தைப் போக்குபவன். தியான மந்திரத்துக்கு உரியவன்; கருணை பொங்கும் கடைக்கண் நோக்குடையவன்; சனிக்கும் சுக்கிரனுக்கும் நண்பன்; ஞான குருவாகிய முருகனுக்கு மகிழ்ச்சியை அளிப்பவன்: இவ்வாறெல்லாம் அந்தக்கிருதியில் தீட்சிதர் சொல்லியிருக்கிறார்.

°° °° °°

ராகு பகவான் பூசித்துப் பேறு பெற்ற ஒரே தலம் திருக்காளத்தி: பஞ்ச பூதங்களில் ஒன்று. 'பிருத்வி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம் என்பவை ஐந்து தலங்கள்; இந்த ஐந்து தலங்களும் பெயர் பெற்றவை. பிருத்வித் தலம் திருவாரூர். பிருத்வி என்றால் மண். புற்றிடங் கொண்ட பெருமானாக வன்மீக நாதர் இங்கே எழுந்தருளியுள்ளார். காஞ்சீபுரத்தையும் பிருத்வித் தலம் என்று கூறுவார்கள்.

அடுத்தது அப்பு (நீர்த்தலம்). திருவானைக் கோயில்; கர்ப்பக் கிரகத்தில் எப்போதும் நீர்சுரந்து கொண்டே இருக்கும். இது அப்புத் தலம். அன்னை அகிலாண்டேசுவரி கோயில் கொண்டு அருள் பாலிக்கும் திருத்தலம்.

மூன்றாவது தேயு (நெருப்பு). திருவண்ணாமலையில் ஜோதிச் சொரூபமாக உள்ளவர். அண்ணாமலைப் பெருமான்.

நான்காவது வாயுத்தலம். இதுதான் திருக்காளத்தி. காளஹஸ்தீசுவரர் கோயிலின் கர்ப்பக் கிரகத்தில் எப்போதும் எரிந்து கொண்டிருக்கும் தீபச் சுடர்களில் ஒன்று மட்டும் காற்றில் அசைவது போல் எப்போதும் ஆடிக் கொண்டே இருக்கும்.

ஐந்தாவது ஆகாயத்தலம் சிதம்பரம்.

சிலந்தியும் பாம்பும் யானையும் இறைவனைப் பூசித்துப் பேறு பெற்றதால் சீ + காளம் + அத்தி என்ற அந்தப்பிராணிகளின் பெயர்கள் இணைந்து சீகாளத்தி என்று அமைந்தது. தட்சிணக் கைலாயம் என்றும் இந்தத் தலத்தைக் கூறுவார்கள்.

ஒரு காலத்தில் ஆதிசேடனுக்கும் வாயுபகவானுக்கும் இடையே, ''யார் அதிகப் பலசாலி?'' என்ற போட்டி ஏற்பட்டது. ஆதிசேஷன் இந்த உலகத்தையே தாங்கியிருப்பதாகக் கூறுவார்கள். இந்த மண்ணுலகத்தைத் தாங்கிநிற்க வேண்டும் என்றால் எவ்வளவு பலம் பொருந்தியவராக ஆதிசேஷன் விளங்க வேண்டும்! வாயு பகவானும் அதே அளவு வலுவுள்ளவர்தாம். சீற்றம் கொண்ட புயலாக வீசினால்

பெரிய பெரிய மரங்களையும் கட்டிடங்களையும் ஒடித்து நொறுக்கித் தரைமட்டமாக்கி விடுவதை நாம் கண்டிருக்கிறோம். அதனால் இவர்களுக்கு ஏற்பட்ட போட்டி தேவர்களுக்குள் பெருத்த உற்சாகத்தை ஏற்படுத்தியது.

மேருமலை மிகப் பெரியது. அந்தக் காலத்தில் இமயமலை கிடையாது. அந்த இடத்தில் கடல் இருந்ததாகப் புவியியல் வல்லுநர்கள் கூடச் சொல்லுகின்றனர். இப்போதைய இமயமலையைப் போல் மேருமலை விண்ணளாவி நின்றது. ஆதிசேஷனுக்கு ஆயிரம் தலைகள் உண்டு என்று சொல்வார்கள். ஆயிரம் முடிகளாலும் மேருமலையை அழுத்திப் பிடித்துக் கொள்ள வேண்டும். அப்படி அழுத்திப் பிடித்துக் கொண்ட மேருமலையை வாயுபகவான், பெருங் காற்றை வீசிப் பெயர்க்க வேண்டும்: இதுதான் அவர்களிடையே எழுந்த கடும் போட்டி.

மேருமலையைப் பெயர்த்து விட்டால் வாயுவுக்கு வெற்றி உண்டாகும். முடியாவிட்டால் ஆதிசேஷனுக்கு வெற்றி. சம பலமுள்ள இரண்டு பேர் போட்டியில் இறங்கினால் விறுவிறுப்பு அதிகந்தானே; தேவர்கள் எல்லோரும் மிகுந்த அக்கறையுடன் பார்த்தார்கள். வாயுதேவன், தன் வலிமையை எல்லாம் காட்டி மலையைப் பெயர்க்க முனைந்தான். ஆதிசேஷன் பிடியைத் தளர்த்தவில்லை. இந்தப் பலப்போட்டியில் மலையின் சிகரங்களில் மூன்று பெயர்ந்து போய்த் தொலைவில் விழுந்தன. அந்தச் சிகரங்களில் ஒன்றுதான் ஸ்ரீகாளத்திமலை.

இந்த மலையின் குடவரைக் கோயிலில் பஞ்சமுகேசுவரர் என்ற ஐந்து முகங்கள் கொண்ட சிவபெருமான் காட்சியளிக்கிறார். இந்த ஐந்து முகங்களும் ஒவ்வொரு திக்கை நோக்கி அமைகின்றன. ஈசானம், அகோரம், வாமதேவம், சத்யோ ஜாதம், தத்புருஷம் என்று அந்த ஐந்து முகங்களுக்குப் பெயர்கள். இந்த பஞ்சமுகேசுவரரைப் பிரமன் ஸ்தாபித்துப் பூஜித்துப் பேறு பெற்றதாக லிங்கபுராணம் கூறுகிறது.

மற்ற இரண்டு கிரகங்களும் விழுந்த இடங்கள் முறையே திருச்சிராப்பள்ளிமலை, திருகோணமலை என்பவை, உச்சிப் பிள்ளையார் கோயில் அமைந்துள்ள மலைதான் இது என்று பெரியோர்கள் கூறுகிறார்கள்.

வாயு பகவான் பூசித்த திருத்தலம் இது. அறுபத்து மூன்று நாயன்மார்களுள் ஒருவரான திண்ணன் என்ற வேடன் இந்தத் தலத்தில் தான் கண்ணப்ப நாயனார் என்ற சிவப்பேறு பெற்றார். பக்தி செய்யும் நெறிக்கே உரைகல்லாக இவர் விளங்கிறார்.

பிறப்பில் வேடராக இருந்தும் தாம் சுவைத்துப்பார்த்து நன்றாக ருசியாக உள்ள மாமிசத்துண்டங்களையே இறைவனுக்கு அர்ப்பித்த உத்தமர். இறைவனுக்கு அபிஷேகம் செய்யத் தண்ணீர் கொண்டுவர பாத்திரம் கிடைக்காமல் கோயிலுக்குப் புறத்தே ஓடும் சொர்ணமுகி ஆற்று நீரைத் தன் வாயில் நிரப்பி வந்து அபிஷேகம் செய்த பக்தர்.

இப்படிப் பரவும் இவருடைய பக்தியை உலகத்துக்குக் காட்டவே காளஹஸ்தீசுவரர் தம் கண்ணில் இரத்தம் வருமாறு செய்தார். கொஞ்சமும் தயங்காமல் தன் கண்ணை அம்பால் தோண்டி இறைவனின் கண்ணில் பொருத்தினார் கண்ணப்பர். உடனே இரத்தம் நின்றது, ஆனால் இறைவனின் இன்னொரு கண்ணிலும் உடனே இரத்தம் கொட்டத் தொடங்கியது. தம் இரண்டாவது கண்ணையும் தோண்டி எடுத்துவிட்டால் இறைவனின் முகத்தில் கண்ணைப் பொருத்த வேண்டிய இடம் தெரியாமற் போய் விடுமே என்று எண்ணி, தம் செருப்புக் காலை தூக்கி இறைவனின் கண் இருக்கும் இடத்தில் அடையாளமாக வைத்துக் கொண்டு தம் இன்னொரு கண்ணையும் தோண்டி எடுத்து இறைவனுக்குப் பொருத்தினார். இந்த அரியச் செயலினால் திண்ணனார் என்ற வேட்டுவக் குலப் பக்தர் கண்ணப்ப நாயனார் ஆனார்.

மூன்று சைவ சமயக் குரவர்களும் இந்தத் தலத்தைப் பாடியிருக்கிறார்கள். கண்ணப்ப நாயனாரின் பக்தியைப் பற்றிப் பட்டினத்தார் பாடியிருக்கிறார். கண்ணப்பனைப் போன்று நான் பக்தி செய்யவில்லையே என்று தம்மை நொந்து கொள்கிறார். இந்தத் தலத்தில் நக்கீரர், இந்திரன், ராமபிரான், முசுகுந்த சக்கரவர்த்தி ஆகியோர் இறைவனைப் பூசித்துப் பேறு பெற்றனர் என்று தலபுராணம் கூறுகிறது. நக்கீரர் இந்தத் தலத்தைப் பற்றிப் பாடியுள்ள கைலைபாதி - காளத்திபாதி என்ற அந்தாதி பிரசித்தி பெற்றது.

இந்தத் தலத்தின் பெருமையைக் கருணைப் பிரகாசர், சிவப்பிரகாச சுவாமிகள், வேலப்ப தேசிகர் ஆகிய சகோதரர்கள் ஸ்ரீகாளத்தி நந்தர் புராணத்தில் பாடியுள்ளார். இந்தப் புராணம் காளஹஸ்திக் கோயிலில் கிடைக்கிறது. இதைத் தவிர ஸ்ரீகாளத்திபுராணம் என்று வேறொரு நூலும் இருக்கிறது. இதைப் பாடியவர் வீரைநகர் ஆனந்த கூத்தர் என்ற புலவர்.

ஒருவரின் ஜாதகத்தில் ராகு கேதுக்கிரகங்கள் சரியாக அமையப் பெறாவிடில் காளஹஸ்தி சென்று காளஹஸ்தீசுவரரையும் ஞானபரசூணாம்பிகையும் வழிபடலாம்.

திருவாதிரை, சுவாதி, சதயம் ஆகிய நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கு ஆதியில் ராகு தசை. (மொத்தம் பதினெட்டு ஆண்டுகள்.)

ராகு தசையிலோ புக்தி அந்தரங்களிலோ சில ஜாதகங்களுக்குத் துன்பங்கள் உண்டாகலாம். கிரகப் பிரீதியைச் செய்தால் கிரகங்களால் உண்டாகும் துன்பங்களைக் குறைத்துக் கொள்ளலாம் என்று ஜோதிட நூல்கள் கூறுகின்றன.

நவக்கிரக ஆராதனை முறை என்ற நமது நூலில் இந்தக் கிரக சாந்திகளைப் பற்றி விவரமாகக் கூறப்பட்டிருக்கிறது. அந்த நூலில் இந்த வழிமுறைகளைக் காணலாம்; பயன் பெறலாம்; பரிகாரம் செய்து கொள்ளலாம்.

ராகுக் கிரகத்தின் காயத்திரி, கவசம், மந்திரம், அஷ்டோத்தர சத நாம அர்ச்சனை முதலியவற்றை அன்றாடம் பாராயணம் செய்து வந்தால் அவருடைய ப்ரீதியைப் பெறலாம். கடைகளில் ராகுவின் பிம்பமோ படமோ கிடைத்தால் வாங்கி வைத்தும் பூசிக்கலாம். (ஆனால் படப் பூஜை கட்டாயமில்லை.) பக்தியுடனும் சிரத்தையுடனும் பாராயணம் செய்து வந்தாலே போதும்; ஒரு பாராயணத்துக்கு 20 நிமிஷத்துக்கு மேல் ஆகாது.

பத்து அவதாரங்களுக்கும் நவக் கிரகங்களுக்கும் தொடர்பு இருக்கிறது. ஒன்பது கோள்களுடன் குளிகன் என்பதையும் சேர்த்துப் பத்தாக்கியிருக்கிறார்கள். முன் சொன்ன அவதாரவரிசையில் கேது, சனி, ராகு, செவ்வாய் குரு, சுக்கிரன், சூரியன், குளிகன், சந்திரன், புதன் ஆகியக் கிரகங்களின் ப்ரீதியாக, தசாவதார ஸ்துதி என்று பத்துச் சுலோகங்கள் உள்ளன.

ராகுவைப்பற்றிய ஸ்தோத்திரத்தை அதில் காணலாம். வராஹ அவதாரம் ராகுக்கிரக சம்பந்தம் உடையது. பகவான் நாராயணன் காக்கும் கடவுளானதால் இந்தத் துதியைப் பாராயணம் செய்தால், ராகுக் கிரகப் பிரீதி உண்டாகும் என்று பராசர ஸம்ஹிதையில் சொல்லப்பட்டிருக்கிறது:

கோபாயே தநிமம் ஜகந்தி குஹநா
　　போத்ரீ பவித்ரீக்ருத

ப்ரஹ்மாண்ட: ப்ரளயோர்மி கோஷ குருபிர்
　　கோணாரவைர்குர்குரை: |

யத்தம்ஷ்டராங்குர கோடிகாட கடநா
நிஷ்கம்ப நித்யஸ்திதி

ப்ரஹ்மஸ்தம்ப மஸௌ தஸௌ பகவதீ
முஸ்தேவ விஸ்வம்பரா ॥

ஆதிசங்கர பகவத்பாதர் அருளிய ஸௌந்தர்ய லஹரி யின் சில சுலோகங்கள் கிரகப்ரீதியாக அமைந்திருக்கின்றன. ஒவ்வொரு கிரகத்துக்கும் உரிய சுலோகத்தைச் சாஸ்திரம் அறிந்த பெரியோர்கள் பகுத்து வைத்திருக்கிறார்கள். ஸௌந்தர்யலஹரீ மொத்தம் நூறு சுலோகங்கள். இதில் ஒரு பகுதிக்கு ஆனந்தலஹரீ என்ற பெயர் உண்டு. ஸௌந் தர்யலஹரீ என்றால் அழகின் பிரவாகம் என்று பொருள்.

ராகு சம்பந்தப்பட்ட சுலோகம் இது. இதைப் பாராய ணம் செய்தால், ராகு ப்ரீதி ஏற்படுவதுடன், எக்காரியத்தி லும் வெற்றி ஏற்படுவது திண்ணம். தினம் ஒன்பது தடவை வீதம் ஒரு மண்டலம் ஜபித்தால் பலன் கிடைக்கும்.

விரிஞ்சி: பஞ்சத்வம் வ்ரஜதி
ஹரிராப்நோதி விரதிம்

விநாஶம் கீநாஶோ பஜதி
தநதோ யாதி நிதநம் |

விதந்த்ரீ மாஹேந்த்ரீ விததிரபி
ஸம்மீலித-த்ருஶா

மஹா-ஸம்ஸாரேஸ்மிந் விஹரதி
ஸதி-த்வத்பதி-ரஸௌ ॥

ராகு பகவான் காயத்திரி

நக த்வஜாய வித்மஹே பத்மஹஸ்தாய தீமஹி
தந்நோ ராஹு: ப்ரசோதயாத் ॥

ராகு பகவான் ஸ்துதி

அர்த்தகாயம் மஹாவீர்யம் சந்த்ராதித்ய விமர்தநம் |
ஸிம்ஹிகா கர்ப்ப ஸம்பூதம் தம் ராஹும்
ப்ரணமாம்யஹம் ||

ஸ்ரீ ராகு கவச ஸ்தோத்ரம்

ஓம் அஸ்யஸ்ரீ ராஹுகவச மஹாமந்த்ரஸ்ய | சந்த்ர ரிஷி: | அனுஷ்டுப்ச்சந்த: | ராஹு: தேவதா | ஹ்ராம் பீஜம் ஹ்ரீம் சக்தி: | ஹ்ரூம் கீலகம் | மம ராஹுக்ரஹ ப்ரஸாத ஸித்யர்த்தே ஜபே விநியோக: |

(கரன்யாஸம்) ராம் அங்குஷ்ட்டாப்யாம் நம: | ரீம் தர்ஜனீப்யாம் நம: | ரூம் மத்யமாப்யாம் நம: | ரைம் அனாமிகாப்யாம் நம: | ரௌம் கனிஷ்ட்டிகாப்யாம் நம: | ர: கரதலகரப்ருஷ்ட்டாப்யாம் நம: |

(அங்கன்யாஸம்) ராம் ஹ்ருதயாய நம: | ரீம் சிரஸே ஸ்வாஹா | ரூம் சிகாயை வஷட் | ரைம் கவசாய ஹும் | ரௌம் நேத்ரத்ரயாய வௌஷட் | ர: அஸ்த்ராயபட் | பூர்ப்புவஸ்ஸுவரோமிதி திக் பந்த: |

(த்யானம்)

ப்ரணமாமி ஸதா ராஹும் ஸர்பாகாரம் கிரீடினம் |
ஸைம்ஹிகேயம் கராளாஸ்யம் பக்தானாம் அபய ப்ரதம் ||
ராஹும் சதுர்ப்புஜம் சர்மசூலகட்கவராங்கிதம் |
க்ருஷ்ணமால்யாம்பரதரம் க்ருஷ்ணகந்தானுலேபனம்
கோமேதகவிபூஷம் ச விசித்ர மகுடாந்விதம் |
க்ருஷ்ணஸிம்ஹரதம் மேரும் யாந்தம் சைவ அப்ரதக்ஷிணம்

(இங்கு லமித்யாதி மானஸ பூஜை செய்ய வேண்டும்)

நீலாம்பரஸ் சிர:பாது லலாடம் லோகவந்தித: |
சக்ஷுஷீ பாது மே ராஹு ச்ரோத்ரத்மதச் சரீரவான் |
நாஸிகாம் மே கராளாஸ்ய: சூலபாணுர் முகம் மம |
ஜீஹ்வாம் மே ஸிம்ஹிகாஸூனு: கண்டம் மே கஷ்டநாசன:

புஜங்கேசோ புஜௌ பாது நீலமால்ய: கரௌமம |
பாது வக்ஷஸ்தமோமூர்தி: பாது நாபிம் விதும்துத: ||
கடிம் மே விகட: பாது சோரூ மே அஸுரபூஜித: |
ஸ்வர்பானுர் ஜானுனீ பாது ஜங்கே மே பாது சாப்யகு: |
குல்பௌ க்ரஹாதிப: பாது நீலசந்தனபூஷித: |
பாதௌ நீலாம்பர: பாது ஸர்வாங்கம் ஸிம்ஹிகாஸுத
ராஹோரிதம் கவசம் ஈப்ஸிதவஸ்துதம் ய:
பக்த்யா படேதனுதினம் நியதஸ் ஸுசிஸ்ஸன் |
ப்ராப்னோதி கீர்திமதுலாஸ்ரிம்ச ச்ரியஸ்ஸம்ருத்திம்
ஆரோக்யமாயு விஜயாத்யஸுரப்ரஸாதாத் ।

ஸ்ரீ ராஹு ஸ்தோத்ரம்

ஓம் அஸ்யஸ்ரீ ராஹு—ஸ்தோத்ர மஹாமந்த்ரஸ்ய |
வாமதேவ ருஷி: | அனுஷ்டுப் ச்சந்த: | ராஹுர் தேவதா |
ராஹு க்ரஹப்ரஸாத ஸித்யர்த்தே ஜபே விநியோக: |

கச்யப உவாச

ச்ருண்வந்து முனயஸ் ஸர்வே ராஹுப்ரீதிகரம் ஸ்தவம் |
ஸர்வரோக ப்ரசமனம் விஷபீதிஹரம் பரம் ||
ஸர்வஸம்பத்கரம் சைவ குஹ்யம் ஸ்தோத்ரமனுத்தமம் |
ஆதரேண ப்ரவக்ஷ்யாமி ஸாவதானா பவந்து ச ||
ராஹுஸ் ஸூர்யரிபுஸ்சைவ விஷஜ்வாலோ அஸிதானன:
ச்ருதாம்சு வைரீ ச்யாமாத்பர விஷ்ணு சக்ரோநிதோபலீ ||
புஜங்கேசஸ் தீக்ஷ்ணதம்ஷ்ட்ர: க்ரூர கர்மாக்ரஹாதிப: |
த்வாதசைதானி நாமானி நித்யம் பக்தியுத: படேத் |
ராஹோ கராளவதன ரவிசந்த்ர பயங்கர |
தமோரூப நமஸ்துப்யம் ப்ரஸாதம் குரு ஸர்வதா ||
ஸம்ப்ரார்த்ய க்ரஹேசம் தம் ஸ்தோத்ரம் ய: ப்ரயத: படேத் |
ராஹு: ப்ரீதமானஸ்தஸ்ய கஷ்டஸ்த்தான-கதோபிவா ||
விஷாந்நஜனிதாம் பீதிம் ந கரோதி கதாசன |
ஸர்வான் காமான் அவாப்னோதி நஷ்டராஜ்யமுபைதிச ||
ராஹுப்ரீதிகரேணாத ஸ்தோத்ரேணானேந ஸர்வதா |
ஸ்துத்வா க்ரஹேசம் ஸ்வர்பானும் ஸர்வான் காமான் அவாப்னுயாத் ||

ஏவம் படேதனுதினம் ஸ்தவராஜமேனம்
ராஹோ: ப்ரஸன்ன ஹ்ருதயோ விஜிதேந்த்ரியோ ய: |
ஆரோக்யமாயுஷ்யமவாப்ய மனோரதார்த்தான்
ஜேஜீயதே ச விஷமா: ச க்ரஹா: ப்ரஸன்னா: ||

ராகு அஷ்டோத்தர சதநாம ஸ்தோத்ரம்

ச்ருணு நாமானி ராஹோஸ்ச ஸைம்ஹிகேயோ விதுந்துத: |
ஸுரசத்ருஸ்தமாஸ்சைவ பணிர்கார்க்யாயநஸ்ததா ||
ஸுராரிர்நீல ஜீமூத ஸம்காஸஸ்ச சதுர்புஜ: |
கட்க-கேடகதாரீ ச வர தாயகஹஸ்தக: ||
சூலாயுதோ மேகவர்ண: க்ருஷ்ணத்வஜ பதாகவான் |
தக்ஷிணாஸா முகரதஸ் தீக்ஷ்ண தம்ஷ்ட்ராகராளக: ||
சூர்பாகாரஸனஸ்தஸ்ச சோமேதாபரணப்ரிய: |
மாஷப்ரிய: காச்யபர்ஷிநந்தனோ புஜகேச்வர: ||
உல்க கபாதயிதா சூலீ நிதிப: க்ருஷ்ண-ஸர்பராட் |
விஷஜ்வாலாவ்ருதாஸ் யோர்த்த சரீ: சாஸ்த்ரவப்ரத: ||
ரவீந்து பீகரச்சாயாஸ்வரூபீ கடினாங்கக: |
த்விஷச்சக்ரச் சேதகோ அத கராளாஸ்யோ பயங்கர: ||
க்ரூரகர்மா தமோரூப: ச்யாமாத்மா நீலலோஹித: |
கிரீடீ நீலவஸன சனிஸாமந்த வர்த்மக: ||
சண்டாளவர்ணோ அச்வ்யருக்ஷ பவோ மேஷ பவஸ்ததா |
சனவத்பலத: சூரோ அபஸவ்யகதிரேவ ச ||
உபராககரஸ்ஸோம ஸூர்யச்சவி விமர்தக: |
நீலபுஷ்பவிஹாரஸ்ச க்ரஹஸ்ரேஷ்ட்டேர அஷ்டமக்ரஹ: ||
கபந்தமாத்ரதேஹஸ்ச யாதுதானகுலோத்பவ: |
கோவிந்தவர: பாத்ரஸ்ச தேவஜாதிப்ரவிஷ்டக: ||
க்ரூரோகோரஸ் சனேர்மித்ரோ சுக்ரமித்ரோ அகோசர: |
மானேகங்காஸ்நானதா தா ஸ்வக்ருஹே பரபலாட்யக: ||
ஸத்க்ருஹே அந்யஸ்ய பலத்ருத் சதுர்த்தே மாத்ருநாசக: |
சந்த்ரயுக்தே து சண்டாள ஜன்மஸூசக ஏவ ச ||
ஸிம்ஹஜன்மா ராஜ்யதாதா மஹாகாயஸ்த்த தைவச |
ஜன்மகர்தா விதுரிபு: மாதகா ஞானதஸ் ச ஸ: ||
ஜன்மகன்யாராஜ்யதாதா ஜன்மஹானித ஏவ ச |
நவமே பித்ருநாசஸ்ச பஞ்சமே ஸோகதாயக: ||
த்யூனே களத்ரஹந்தாச ஸந்தமே கலஹப்ரத: |
ஷஷ்ட்டேது வித்ததாதா ச சதுர்த்தே வைரதாயக: ||
நவமே பாபதாதா ச தசமே சோகதாயக: |
ஆதெள யச: ப்ரதாதா ச ஹ்யந்தே வைரப்ரதாயக: ||
காலாத்மா கோசரசர: தனேசாத ககுத்ப்ரத: |
பஞ்சமே திஷணாச்ருங்கதஸ் ஸ்வர்பானுர்பலீ ததா ||
மஹாஸெளக்ய ப்ரதாயீ ச சந்த்ர வைரீச சாஸ்வத: |
ஸுரசத்ரு: பாபக்ரஹ: சாம்பவ: பூஜ்யகஸ்ததா ||
பாடீர பூரணஸ்சாத பைடீனஸகுலோத்பவ: |

தீர்க்க க்ருஷ்ணோதனுர் விஷ்ணுநேத்ராரிர் தேவதானவ:
பக்தரக்ஷா ராஹுமூர்தி: ஸர்வாபீஷ்ட பலப்ரத: |
ஏதத்ராஹுக்ரஹஸ்யேதம் நாம்னாமஷ்டோத்தரம்
சதம் ||

ச்ரத்தயா யோ ஜபேந்நித்யம் முச்யதே ஸர்வ ஸங்கடாத் |
ஸர்வ ஸம்பத்கரஞ்சைவ ஸர்வாபீஷ்டப்ரதாயகம் ||

ஸ்ரீ ராகு அஷ்டோத்தர சத நாமாவளி

(ஒவ்வொரு நாமாவின் முன் 'ஓம்' என்றும் முடிவில் 'நம:' என்றும் சேர்த்துச் சொல்ல வேண்டும்)

ஓம் ராஹுவே நம :
ஸைம்ஹிகேயாய
விதுந்துதாய
ஸுர-ஶத்ரவே
தமஸே
பணிநே
கார்க்யாயனாய
ஸுராரயே
நீலஜீமூத ஸங்காஶாய
சதுர்ப்புஜாய (10)
கட்க-கேடக-தாரிணே
வரதாயகஹஸ்தகாய
சூலாயுதாய
மேகவர்ணாய
க்ருஷ்ணத்வஜ
பதாகவதே நம:
தக்ஷிணாசாமுகரதாய
தீக்ஷ்ண தம்ஷ்ட்ரா
கராளகாய
சூர்பகாராஸன ஸ்த்தாய
கோமேதாபரண
ப்ரியாய
மாஷப்ரியாய (20)
காச்யபர்ஷிநந்தனாய
புஜகேச்வராய
உல்காபாதயித்ரே
சூலினே
ஓம் நிதிபாய
க்ருஷ்ண ஸர்பராஜாய
விஷஜ்வாலா
வ்ருதாஸ்யாய
அர்த்த-சரீராய
சாத்ரவப்ரதாய
ரவீந்துபீகராய (30)
சாயாஸ்வரூபிணே
கடினாங்ககாய
த்விஷச் சக்ரச் சேதகாய
கராளாஸ்யாய
பயங்கராய
க்ரூரகர்மணே
தமோரூபாய
ச்யாமாத்மனே
நீலலோஹிதாய
கிரீடினே (40)
நீலவஸனாய
சனிஸாமந்த
வர்த்மகாய
சண்டாளவர்ணாய
அச்வ்யருக்ஷபவாய
மேஷபவாய
சனிவத்பலதாய
சூராய
அபஸவ்யகதயே
உபராககராய

ஸோமஸூர்யச்சவி
விமர்தகாய 50
நீலபுஷ்பவிஹாராய
க்ரஹஸ்ரேஷ்ட்டாய
அஷ்டமக்ரஹாய
கபந்தமாத்ரதேஹாய
யாதுதான்
குலோத்பவாய
கோவிந்தவர பாத்ராய
தேவஜாதிப்ரவிஷ்டகாய
க்ரூராய

ஸனேர்மித்ராய நம: 60
சுக்ரமித்ராய
அகோசராய
மானேகங்கா-
ஸ்நானதாத்ரே
ஸ்வக்ருஹே
ப்ரபலாட்யதாய
ஸத்க்ருஹேந்யபலத்ருதே
சதுர்த்தே மாத்ரு நாசகாய
சந்த்ரயுக்தே சண்டாள
ஜன்ம ஸூசகாய
ஜன்மஸிம்ஹாய
ராஜ்யதாத்ரே
மஹாகாயாய 70
ஜன்மகர்த்ரே
விதுரிபவே
மாதகர்க்ஞானதாய
ஜன்ம கன்யா-
ராஜ்ய தாத்ரே
ஜன்மஹானிதாய
நவமே பித்ருநாசாய
பஞ்சமே ஸோகதாயகாய
த்யூநே களத்ரஹந்த்ரே
ஸப்தமே கலஹப்ரதாய

ஓம் ஷஷ்ட்டே
வித்ததாத்ரே 80
சதுர்த்தே வைரதாயகாய
நவமேபாபதாத்ரே
தசமேசோகதாயகாய
ஆதௌ யச: ப்ரதாத்ரே
அந்தே வைரப்ரதாயகாய
காலாத்மனே
கோசரசரயாய
தனே ககுத்ப்ரதாய
பஞ்சமே திஷ்ணா
ச்ருங்கதாய
ஸ்வர்பானவே நம: 90
பலினே
மஹாஸௌக்ய
ப்ரதாயினே
சந்த்ரவைரிணே
சாஸ்வதாய
ஸுரஸத்ரவே
பாபக்ரஹாய
சாம்பவாய
பூஜ்யகாய
பாடீரபூரணாய
பைடீநஸ
குலோத்பவாய 100
தீர்க்காய
க்ருஷ்ணாய
அஸிரஸே
விஷ்ணுநேத்ராரயே
தேவாய
தானவாய
பக்தரக்ஷாய
ராஹுமூர்தயே
ஸர்வாபீஷ்ட
பலப்ரதாய

ராகு பகவான் நூல் முற்றிற்று

|| சுபம் ||

K. N. S.-ன் இதர நூல் வெளியீடுகள்

1. நவக்கிரக ஆராதனை
2—10. ஒன்பது நூல்கள் ஒன்பது கோள்கள்
11. விவாக மந்திரங்கள் எதற்காக?
12. சிறப்புத் திருத்தலங்கள்
13. ஜோதிர்லிங்கங்கள் *(பன்னிரண்டு)*
14. மகான்களின் வாழ்வும் வாக்கும்
15. பதஞ்சலி யோக ஸூத்ரம்
16. தைத்திரீய ஆரண்யகம் *(சூரிய நமஸ்காரம்)*
17—28. சுபமங்கள ஸ்தோத்ரம் *(12 வால்யூம்கள்)*
29—33. நாராயணீயம் *(5 வால்யூம்கள்)*
34. உங்களுடைய இறப்பும் பின் பிறப்பும்
35. திருமணம்
36. சாஸ்திரமும் மழையும்
37. உழைப்பின் உயர்வில் வாழ்வு
38. தன் மதிப்பை உயர்த்த வழிகள்
39. சகோதரிகளுக்கு
40. சினேகம் சிறக்கச் சிந்தனைகள்
41. இயற்கை வைத்தியம்
42. பாரதி கண்ட புதுமைப்பெண்
43. ஜோதிட அனுபவ ஆராய்ச்சிக் கட்டுரைகள்
44. ஜாதகமும் உங்கள் தொழிலும்
45. உங்கள் ஆயுளை அறியவேண்டுமா?
46. பராசரஸம்ஹிதை
47. ஜாதக பலதீபிகை
48. ஜாதகதத்துவம்
49—51. ஸாராவளி *(மொத்தம் 3 பாகங்கள்)*
52—54. ஜாதகத்வாதச பாவபலநிர்ணயம் (3 Vols)
55. புத்திர பாவத்தை அறிய வேண்டுமா?
56. பிருஹத் ஜாதகம்
57. உடுதசா பலன் *(தசாபுக்திகளின் பலன்களுடன்)*
58. உங்கள் நட்சத்திரம்
59. ஸர்வார்த்த சிந்தாமணி
60. கோசரபலநிர்ணயம்
61. சகுனங்கள் என்ற சகுனபல நிர்ணயம்
62. நஷ்ட ஜாதகம்
63. ஸ்திரீஜாதகம்
64. யோகங்கள் பலவிதம்
65. அங்கவித்யா என்ற அங்க ஆரூடம்
66. ஜோதிடமும் உங்கள் ஆரோக்கியமும்
67. ஜோதிடமும் சமையற்கலையும்
68. தமிழ் அறுபது ஆண்டுகள்
69. ஜாதகசந்திரிகை (திருமணப் பொருத்தம்)
70. ஜாதகாலங்காரம் (Vols I & II)
71. அஷ்டகவர்க்கம்

ஆசிரியை K. N. சரஸ்வதி அம்மையாரைப் பற்றி



டாக்டர் கே. என். சரஸ்வதி அம்மையார் தொடக்கக் காலத்தில் பாரத சாரணர் இயக்கத்தின் வழிகாட்டி - முதல்வராகவும் (Guide - Captain) காந்தி கிராமம் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி மாணவர் ஒன்றியத் துணைச் செயலாளராகவும் சென்னை-பள்ளிகள் முன்னேற்ற மாநாட்டு (Schools - improvement - Conference) உறுப்பினராகவும் சென்னை - தியாகராயநகர் அரசினர் பெண்கள் உயர்நிலைப்பள்ளி ஆலோசனைக் குழுவின் செயலாளராகவும், சென்னை வித்யோதயா பெண்கள் ஆங்கிலப்பள்ளியின் பொருளாளராகவும் தியாகராயநகர் பெண்கள் கூட்டுறவு மன்றத்தின் இயக்குநராகவும் பல துறைகளில் பரபரப்பாகப் பணியாற்றிய இவர், பின்னர் மன இயல் ஆய்வு நிறுவனத்தின் கிளை ஆய்வுத் தொடர்பாளராகவும் (Field-reporter), அமெரிக்காவில் உள்ள சில மன இயல் துறைநிபுணர்களின் சங்கங்களில் ஆலோசகராகவும் இருந்திருக்கிறார். பெண்களுக்கு, குறிப்பாக ஆதரவற்றோருக்கு, ஆங்கிலம், கணிதம், ஒழுங்கைப் பற்றிய பாடம் ஆகியவற்றைக் கற்றுத் தருவதில் இவருக்குச் சுமார் பத்தாண்டுகள் அநுபவம் உண்டு. கௌன்ஸெலிங் (counselling), சம்பந்தப்பட்ட பல தேசிய, அனைத்துலகமாநாடுகளிலும் ஆய்வுப் பட்டறைகளிலும் (workshops) கலந்து கொண்டு அத்துறையினருக்கும் பொதுமக்களுக்கும் நல்ல ஆலோசகராக இருந்து தன் உதவியை வழங்கி வருகிறார். ஜோதிடத் துறையிலும் சிறந்து விளங்கி பல நூல்களை வெளியிட்டுள்ளார். திருமதி K. N. S. அவர்களின் வெளியீடு பட்டியலை உள்பக்கம் அட்டையில் காண்க.